பகுதிகளுக்கும், எனது தொகுதிக்கும் கிட்டத்தட்ட 101 கி.மீ. தூரம் உள்ளது. எனவே, செய்யூர் பகுதியில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 75 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 91 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்தான் இதுவரை உருவாக்கப்பட்டிருந்தன. ஆனால், ஆட்சிப் பொறுப்பேற்று இந்த 11 மாதங்களில் 11 தொழிற்பயிற்சி நிலையங்களை அறிவித்திருக்கின்ற ஒரே அரசு மாண்புமிகு தளபதி அவர்களின் அரசு என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இவற்றை எதற்காக அறிவித்திருக்கிறார்கள் என்று சொன்னால், படித்திருக்கின்ற இளைஞர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஆண்டு மட்டுமே 11 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் துவக்கப்பட இருக்கின்றன. ஆகவே, இந்த மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டு உங்களுடைய தொகுதியிலும் அங்கு இருக்கின்ற தொழிற்சாலைகளின்மூலம் மற்றும் அங்கு இருக்கின்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுகின்ற சூழலுக்கேற்ப தொழிற்பயிற்சி நிலையம் உருவாக்கப் பரிசீலிக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 209, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா அவர்கள். மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

209—

இ-சேவை மையம்

***1360—திரு. JMH. அசன் மௌலானா:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, பேபி நகர் பகுதியில் இ-சேவை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி சட்டமன்றத் தொகுதியில் மொத்தம் 10 இ–சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. இம்மையங்கள் வாயிலாகக் கடந்த இரண்டாண்டுகளில் 27,031 பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதுபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள பேபி நகர் பகுதியில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவன உரிமம் பெற்ற ஒரு இ–சேவை மையம் செயல்பட்டு வருகின்றது. இந்த மையத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 1,432 பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே, அந்தப் பகுதியில் மீண்டும் ஒரு இ–சேவை மையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை. அவ்வாறு அவசியம் இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதினால் அதுகுறித்துப் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா அவர்கள்.*

திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். இன்று எங்களுடைய மாவட்டச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையில் பேசவிருக்கிறார்கள், அவர்களுக்கு எனது வாழ்த்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய அந்த இ–சேவை மையம் என்பது சீதாபதி நகர், 100 அடி சாலையில் இருக்கக்கூடிய இ–சேவை மையம் ஆகும். இது வடக்குப் பகுதியில் உள்ளது. நான் குறிப்பிடும் இடம் தெற்குப் பகுதியில் உள்ளது. இந்தப் பகுதியில் பேபி நகர், டான்சி நகர், உதயம் நகர், சாரதி நகர், கல்லுக்குட்டை, விஜிபி செல்வா நகர், பெரியார் நகர் ஆகிய இடங்கள் இருக்கின்றன. அங்கு இருக்கக்கூடிய அனைவருமே maximum, retired life *வாழக்கூடியவர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வடக்குப் பகுதியில் உள்ளதை தெற்குப் பகுதிக்கு கேட்கிறீர்கள். (குறுக்கீடு) செய்து தருவார்களா என்று மட்டும் கேளுங்கள்.*

திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதிக்கு இ–சேவை மையம் வந்தால் retired life வாழக்கூடியவர்களுக்குக் கொஞ்சம் easy ஆக இருக்கும். ஏனென்றால் அவர்கள் அனைவரும் முதியோர்கள், சாலையைக் கடந்து வர வேண்டும்; இரண்டு முதல் மூன்று கிலோ மீட்டர் தூரம் வரை நடந்து வர வேண்டியுள்ளது. ஆகவே, இதனைத் தாங்கள் கருணையுடன் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், Good Governance வழங்குவதற்கு கணினிமாயமாக்குதல் மிக முக்கியம் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: அதன் அடிப்படையில் இப்போது இ-சேவை மையங்கள் மூலமாக புதிதாக 60 சேவைகளைக் கூடுதலாக வழங்கி, மொத்தம் 192 சேவைகள் வழங்கியிருக்கிறோம். அதுமட்டுமல்ல, தமிழகம் முழுவதும், அனைத்துப் பகுதிகளிலும், தேவைப்படுகின்ற இடங்களில் இ-சேவை மையங்களை அமைப்பதற்கு நாம் தயாராகயிருக்கின்றோம்.

அதோடு வருகின்ற காலங்களில், நாம் அறிமுகம் செய்திருக்கின்ற Citizen Portal மூலம், ஒவ்வொருவரும் தங்களுடைய mobile phone மூலமாகவே அரசின் திட்டங்களைப் பெறக்கூடிய ஒரு சூழல் உருவாகியுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற அந்தப் பகுதிக்கு, முறையாக அவர்கள் ஒரு கடிதம் கொடுத்தார்கள் என்றால் அதனைத் தொடங்குவதற்கான முயற்சி உடனடியாக மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா அவர்கள்.

2022 ஏப்ரல் 29]

திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல், இந்த ஆண்டு 400 புதிய இ–சேவை மையங்கள் வர இருக்கின்றன என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் அறிவித்தார்கள். மேலும், சட்டமன்ற உறுப்பினர்கள் அலுவலகத்தில் இ–சேவை மையம் வரும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படி வரும் என்றால் எப்போது வரும் என்பது ஒரு கேள்வி. இன்னும் ஒரு கேள்வி, அப்படி வரவில்லை என்றால் சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைக்கும் நபர்களுக்கு அது வழங்கப்படுமா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், கலைவாணர் அரங்கத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் நாம் ஏற்கெனவே பயன்படுத்திய* computer*–களை ஒவ்வோர் உறுப்பினர்களுக்கும் கொடுத்து, அவர்களுடைய அலுவலகத்தில் தொடங்கலாம் என்ற ஒரு கருத்தைக் கூறியிருக்கின்றார். நாங்கள் அதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று உடனடியாக அதைப் பெற்றுத் தருவதற்கான முயற்சியை மேற்கொள்வோம். அதோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோன்று, எந்தப் பகுதியில் இ–சேவை மையம் தேவை என்று நீங்கள் கருதுகின்றீர்களோ, அந்தப் பகுதியிலுள்ள, அதற்குத் தகுதியுள்ள நபர்கள், அதாவது விதவைகள், மாற்றுத் திறனாளிகள் போன்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நீங்கள் மின் ஆளுமை முகமைக்கு* (TNeGA) *முறையாக விண்ணப்பித்தால், அந்த விண்ணப்பங்களைப் பரிசீலித்து அந்தப் பகுதிகளிலெல்லாம் இ–சேவை மையங்கள் தொடங்குவதற்கான நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய அனைத்து சேவைகளுமே இன்றைக்கு இ–சேவைகளாக மாறியிருக்கின்றன. அதைப் பயன்படுத்துகின்ற*

பயனாளிகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், அதற்கான Server capacity குறைவாக இருக்கிறதென்று சில அதிகாரிகள் சொல்கின்றார்கள். அதனால் Server capacity–ஐ தேவையான அளவு அதிகப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

இங்கே சட்டமன்றத்தில், பேரவை உறுப்பினர்கள் கையை உயர்த்திக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய கடைக்கண் பார்வை இந்தப் பக்கம் திரும்புமா என்று எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல பக்கத்தில் இருக்கிறவர் பார்வையும் எங்கள் பக்கம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோருடைய பார்வையும் உங்கள்மேல் இருக்கிறது. உங்கள் பெயர் இங்கே இருக்கிறது. அதனால்தான் கூப்பிட்டிருக்கிறேன். மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இ–சேவை மையம் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் மாணவர்கள் மரங்களில் ஏறி பாடம் படிப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஏனென்றால், Server பிரச்சினைகள், connectivity problems எல்லாம் இருந்தன. ஆனால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில் பல ஆண்டுகளாகக் கிடப்பில் கிடந்த TANFINET Project, திட்டத்தை இன்றைக்கு முறையாக roll out செய்துவிட்டோம்.

ஓராண்டுக் காலத்தில், ஓராண்டுகூட ஆகாது, அதற்குள் தமிழகம் முழுவதும் அனைத்துப் பகுதிகளுக்கும் முறையான connectivity கிடைக்கும். அப்படி வருகின்றபோது எந்தப் பிரச்சினையும் இருக்காது. அவர்கள் சொன்னதைப்போன்று Server–ஆல் ஏற்படும் பிரச்சினைகள், Software updation அனைத்தையும் ஒவ்வொன்றாக மிகத் துல்லியமாக நம்முடைய துறை கவனித்து வருகிறது.

அதுமட்டுமல்ல, அனைத்துத் துறை சார்ந்த அரசின் அனைத்து திட்டங்களையும் வருகின்ற காலங்களில் இ–சேவை மையங்கள் மூலமாகவும், Citizen Portal மூலமாகவும் குடிமக்கள் பெறுகின்ற அளவுக்கு மிக வேகமாகத் திட்டமிட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, வருகின்ற காலங்களில் அந்தப் பிரச்சினைகள் இருக்காது.

2022 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்ட கேள்வியையொட்டிதான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன். காகிதமில்லா சட்டமன்றத்தைத் திறம்படச் செயல்படுத்துகின்ற நமது அரசு, பொதுமக்கள் எந்தக் கோரிக்கையை அரசுக்கு வைக்க வேண்டுமென்றாலும், அது சாதிச் சான்றிதழோ, வருமான சான்றிதழோ, வீடு வேண்டும் என்ற திட்டமோ, கடன் வழங்கும் திட்டமோ எதுவாக இருந்தாலும்* online–*ல் பதிவு செய்யப்பட்டுத்தான் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.*

முற்பகல் 11–05

இந்த நிலையில், என்னுடைய தொகுதியில் வட்டாட்சியர் அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் மட்டும்தான் அரசு சார்பாக இ–சேவை மையங்கள் இருக்கின்றன. குறைந்தபட்ச கட்டணம் 60 ரூபாய் என்றாலும்கூட 150 ரூபாய், 200 ரூபாய் என்று வாங்குகின்ற நிலை தனியார் இ–சேவை மையங்களில் நிலவுகிறது. இது எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரிந்த விஷயம்தான். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் திரு. அசன் மௌலானா அவர்கள் சொன்னதைப்போல, சட்டமன்ற உறுப்பினர்கள் அலுவலகத்திலும் அந்த இ–சேவை மையத்தைத் தொடங்கினால் அது மேலும் ஏழையெளிய மக்கள் பயன்பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கருணையோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்று என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக ஒரு சான்றிதழ் வாங்குவதற்குக்கூட ஒவ்வோர் அலுவலகமாகச் சுற்றி, அங்கே காத்துக்கிடந்து, பல்வேறு கஷ்டங்களை அனுபவிக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது. அந்த நிலை மாற வேண்டுமென்பதற்காகத்தான்*

அனைத்தும் கணினிமயமாக்கப்பட வேண்டும் என்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் எண்ணத்தின் அடிப்படையில் திட்டமிட்டு நாங்கள் பணியாற்றிக்கொண்டிருக்கின்றோம்.

அதிகமான கட்டண வசூல் இருக்கிறது என்று ஒன்றிரண்டு குற்றச்சாட்டுகள் தொடக்கத்தில் இருந்தன. இப்போது அவற்றைச் சீர்படுத்தும் விதமாக, online–ல் payment செய்வதற்கான வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்களும் அதை வலியுறுத்தலாம். அதேபோன்று, அதிக கட்டண வசூல் குறித்த குற்றச்சாட்டு இருப்பின், நாங்கள் மீண்டும் அதைக் கண்காணித்து, அனைத்துக் கட்டணங்களையும் online–லேயே payment செய்வதற்குண்டான வசதிகளைச் செய்து தரும் முயற்சியில் ஈடுபடுவோம்.

மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று, தனியாருக்குக் கொடுக்கக் கூடாது என்பதில்லை; எந்தெந்தப் பகுதிகளில் தேவை இருக்கிறதோ, அதற்கு வேலையில்லாப் பட்டதாரி இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம். அவற்றைப் பரிசீலித்து, நிச்சயமாக அதை வழங்குவதற்கான முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 210, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

210—

சமுதாயக் கூடம்

***1716—திரு. V.P. கந்தசாமி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் தொகுதி, சூலூர் ஊராட்சி ஒன்றியம், கனியூர் ஊராட்சியில் வசிக்கும் ஆதி திராவிடர்களுக்கு சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?